பாடம் - 10

# தேவனுடைய தெய்வீகத் திட்டம்

# மகா பரிசுத்தமான விசுவாசம் பாகம் -2



# THE MOST HOLY FAITH PART - 2

*For Further Details : Email us : baskar_harvest@yahoo.co.in, Phone : 97886 19229, 93641 50005*

# மகா பரிசுத்தமான விசுவாசம் - பாகம் 2



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே,

இன்றைக்கு நாம் விசுவாசம் பற்றின பாடத்தின் இரண்டாம் பாகத்தை தியானிக்கலாம். முந்தைய பாடத்தில் , கிறிஸ்தவர்களுடைய விசுவாசம் **மகா பரிசுத்தமான விசுவாசமாக வளரவேண்டும்** என்பதை **யூதா 20**ம் வசனத்தில் பார்த்தோம். மேலும், இந்த விசுவாசமானது, **வேதாகம போதனைகளின் அடிப்படையில் அமைந்துள்ளவைகளை மட்டுமே சத்தியம்** என்று முழுவதுமாக நம்பும் என்று பார்த்தோம்**(யோவான் 17:17).** இன்று இந்த மகா பரிசுத்தமான விசுவாசத்திலிருந்து "வழிவிலகிப்போதல்" சபைக்குள்ளாக எவ்வாறு சம்பவித்தது என்பதைக்குறித்து தியானிக்கலாம். நாம் வேதத்தில் உள்ள ஒரு தீர்க்கதரிசனத்தை வாசித்து இதற்கு விடைகளைக் கண்டுபிடிக்கலாம்.

**2கொரிந்தியர் 11:3 - "சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்"**



இங்கு அப்போஸ்தலனாகிய பவுல், சாத்தான் ஏவாளை ஏதேனில் வஞ்சித்ததுபோல சபையையும் வஞ்சித்துவிடுவான் என்று அஞ்சுகிறார். இங்கு சபையை ஏவாளுடன் ஏன் ஒப்பிடவேண்டும்... என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். நாம் அறிந்தபடி ஆதாம், ஏவாள் மூலமாக இன்றைக்கு மனுக்குலம் முழுவதும் பெருகினதுபோல... "மரணத்திற்குள்ளும்" அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

**ரோமர் 5:12 - "இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று".**

ஆனால், ஏற்றகாலத்தில் "இரண்டாம் ஆதாம்" வருவதைப்பற்றி வாசிக்கிறோம்;

**1கொரிந்தியர் 15:45 - "அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது. பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார்"**

அதேபோல் இரண்டாம் ஏவாளும் இருக்கவேண்டும். இந்த இரண்டாம் ஏவாள் சபைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஆம்.இயேசுவும் ஒரு மணவாட்டியை உடையவராயிருக்கிறார். கிறிஸ்துவின் சபையே அந்த இரண்டாம் ஏவாள். ஆக, அன்றைக்கு சாத்தான் ஏவாளை ஏதேனில் வஞ்சித்ததுபோல, இன்றைக்கும் சபையை சாத்தான் கள்ளபோதனைகளின் மூலம் வஞ்சித்துவிடுவான் என்று பவுல் அஞ்சுகிறார். ஆதி சபையை சாத்தான் எவ்விதமாக வஞ்சித்தான் என்று கீழுள்ள வசனத்தின்மூலம் அறிந்துகொள்ளலாம்.

**கலாத்தியர் 3:1 - "புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்?"**

ஆம். இங்கு அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியர்களை கடிந்துகொண்டு புத்திசொல்லுகிறதைப் பார்க்கிறோம். அவர்கள் யூதர்களுடைய சட்டதிட்டங்களை குறித்து மிகவும் குழப்பம் உள்ளவர்களாக இருந்தார்கள். இது ஆதிசபையில் ஒரு பிரச்சனையாகவே இருந்தது. ஆதிசபையில் அனைவரும் யூத மார்க்கத்திலிருந்து வந்தவர்கள். அவர்கள் யூதர்களாக இருந்தபோது மிகக் கடுமையான எல்லா சட்டதிட்டங்களையும் கடைபிடித்தார்கள்.ஆனால் இப்பொழுது இந்த சட்டதிட்டங்களை கடைப்பிடிக்க வேண்டுமா... வேண்டாமா என்ற குழப்பத்தில் இருந்தார்கள். மேலும் இதைக்குறித்து அப்போஸ்தலர்கள் நடபடிக்கைகளிலும் வாசிக்கும்பொழுது...

**அப்போஸ்தலர்15:1 - "சிலர் யூதேயாவிலிருந்து வந்து, நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனமடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம்பண்ணினார்கள்"**

ஆம். இந்த வசனத்தில் வாசித்தபடி, ஒரு யூத கிறிஸ்தவன் நியாயப்பிரமாணத்தின் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிந்து இருக்கவேண்டும் என்று ஆதிசபையில் போதிக்கத் தொடங்கினார்கள். இங்கும் கிறிஸ்தவர்களாக மாறினவர் மத்தியில் சட்டதிட்டங்களை கடைப்பிடிக்கவேண்டுமா இல்லையா என்பதில் குழப்பம் நேரிட்டதைக் காண்கிறோம். மேலும் சாத்தான் அவர்களைக் குழப்ப வகை தேடினான். அவனுடைய கிரியைகள் அப்போஸ்தலர்களுடைய நாட்களிலேயே தொடங்கிவிட்டது என்றால்.. தற்போதைய நிலைமையை சற்று சிந்தித்துப் பாருங்கள். இன்னும் ஆதி சபையில் அவன் ஏற்படுத்தின வேறு ஒரு வஞ்சகத்தைக் குறித்து கவனிப்போம் :

**1கொரிந்தியர் 15:12 - "கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று பிரசங்கிக்கப்பட்டிருக்க, மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம்?"**

ஆம். இங்கு உயிர்த்தெழுதலைக் குறித்த சந்தேகங்களை சாத்தான் அவர்கள் மத்தியில் எழும்பச் செய்ததைக் காண்கிறோம். இப்படிப்பட்ட வஞ்சகங்களைக் குறித்தும், வஞ்சிக்கிறவர்களைக் குறித்தும் நம்முடைய ஆண்டவராகிய இயேசுவும், அப்போஸ்தலனாகிய பவுலும் நம்மை எச்சரித்திருக்கிறார்கள்;

**அப்போஸ்தலர் 20:29,30 - "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்"**

இங்கு அப்போஸ்தலனாகிய பவுல்,"ஓநாய்களைப்" போல் எழும்பக்கூடிய கள்ள தீர்க்கதரிசிகள் சபையைக் கெடுத்துவிடுவார்கள் என்று எச்சரிக்கிறார். இதைக்குறித்து நம்முடைய ஆண்டவராகிய இயேசு வெகுகாலத்திற்கு முன்பே எச்சரித்திருக்கிறார்:



**மத்தேயு 7:15 -"கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள். உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்."**

ஆம்."**ஆட்டுத்தோலைப்**" போர்த்தி இருப்பார்கள். உள்ளத்திலே "**வஞ்சிக்கிற ஓநாய்களைப்**"போல் இருப்பார்கள் . இதன் பொருள் என்ன?

இங்கு சொல்லப்படுகிற ஆட்டுத்தோல் என்பது வெளிப்புற வேஷமான அன்பு, தயவு, நயவசனிப்பு ஆகும். ஆனால் ஓநாய்கள் எப்படி ஆட்டை அடித்து புசிக்கும் நோக்கத்துடன் இருக்கிறதோ அப்படியே அவர்களுடைய உள்ளமும் சுயநலமான லாபத்தை எதிர்பார்த்து மந்தைகளை நஷ்டப்படுத்தக்கூடிய நோக்கத்தோடு இருக்கிறது.

ஆம். இந்த தீர்க்கதரிசன வசனம் கள்ள தீர்க்கதரிசிகளின் குணங்களை எடுத்துக்காட்டுகிறது. இந்த வசனத்தின் அடிப்படையில் அடுத்தகேள்வி எழும்புகிறது---
உண்மையில் தீர்க்கதரிசி என்பவர் யார்? மேலும் தீர்க்கதரிசனம் என்பது என்ன? இன்றைக்கு இருக்கக்கூடிய சபைகளில் தீர்க்கதரிசனம் என்பது அன்றாடப் பிரச்சனைகளைக் குறித்தும், மற்ற தனிப்பட்ட காரியங்களைக் குறித்தும் பொதுவாக ஜெபத்தின்மூலம் அறிவிப்பது என்று நினைத்துக்கொள்கிறார்கள்.
இது தீர்க்கதரிசனமா, இதற்கான பதிலை வேதாகமத்தில் வாசிக்கலாம்.

**வெளி19:10- "..இயேசுவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாக இருக்கிறது"**



ஆம், "இயேசுவைக் குறித்த சாட்சி" மட்டுமே "**தீர்க்கதரிசன ஆவி**" என்று

சொல்லப்படுகிறது. மேலும் இவை அனைத்தும் வேதாகமத்தில் அடையாளங்களினாலும் உவமைகளினாலும் பூட்டப்பட்டுள்ளது. ஆகவே வேதாகமத்தையும் அதிலுள்ள வசனங்களையும் விளக்குவதே உண்மையான தீர்க்கதரிசனம் ஆகும். மேலும், அப்படி செய்பவர்களே உண்மையான தீர்க்கதரிசியும், போதகரும் ஆவார்கள். ஆனால் இங்கு இயேசு கள்ளப் போதகர்களைப்பற்றி நமக்கு எச்சரிப்பைக் கொடுக்கிறார்.

அவர்கள் வெளிப்புறத்தில் மாயமான அன்பையும், தயவையும் காண்பித்து சுயநலமான லாபங்களை எண்ணி, மந்தையின் ஆவிக்குரிய வாழ்க்கையை கெடுப்பவர்களாக இருப்பார்கள். இப்படிப்பட்ட கள்ள போதகர்களை அப்போஸ்தலனாகிய யோவானும் தம்முடைய நிருபத்தில்,

**1யோவான் 4:1,2 - "நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்"**

இங்கு யோவான் "எல்லா ஆவிகளையும் நம்பாதேயுங்கள்" என்று எச்சரிப்பாக சொல்லுகிறார்.இங்கு,"இது தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" என்பதன் பொருள் என்ன?

இன்றைக்கு "ஆவிகளைப்பற்றிய" பொதுவான கருத்துப்படி.. இரவில் வருவதாக நம்பப்படும் பிசாசுகளை சோதிக்கவேண்டுமென்று அவர் சொல்கிறாரா?

நிச்சயமாக இல்லை. இங்கு வசனத்தில் உள்ளபடி சொல்லப்பட்ட "ஆவி" என்ற வார்த்தையானது வேறு அர்த்தம் உடையதாக இருக்கிறது. அடிப்படையில் , ஆவி என்பது..."**காணமுடியாத, அதே சமயம் வல்லமையுள்ளவற்றை"** குறிக்கும். வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி, **"ஆவி"** என்பதற்கு மூன்று அர்த்தங்கள் உள்ளது. இப்பொழுது ஒவ்வொன்றாக பார்ப்போம்.

**பிரசங்கி 12:7 - " ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும்.."**

இங்கு**"ஆவி" என்பது"ஜீவ சுவாசத்தை"** குறிக்கும். இது நம்முடைய சரீரத்தை இயங்கச் செய்கிறது. இது காணக்கூடாததும் வல்லமையுள்ளதாகவும் இருக்கிறது" உயிருள்ள ஒரு சரீரம் **சிந்தனைகள்** இல்லாமல் இருப்பதை சற்று கற்பனை செய்துபாருங்கள். உங்கள் அருகில் உள்ள மனநல மருத்துவமனைக்கு சென்று பதிலை கண்டடையுங்கள். ஆனால் **1யோவான் 4:1** வசனத்தில் சொல்லப்பட்ட ஆவியின் பொருள் என்ன? **ஜீவ சுவாசமா? அல்லது சிந்தையா?**

இரண்டும் இல்லை. இந்த இரண்டு அர்த்தங்களும் இந்த வசனத்திற்குப் பொருந்தவில்லை என பார்க்கிறோம். அப்படியென்றால் இதற்கு மூன்றாவதாக ஒரு அர்த்தம் இருக்கவேண்டும் என்பதே உண்மையாகும்.

**யோவான் - 6:63 -".. நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது"**

இந்த வசனத்தில் இயேசு மூன்றாவது அர்த்தத்தைக் கூறுகிறார். ஆம். இங்கு **"ஆவி" என்பது உபதேசங்கள் அல்லது போதனைகளைக் குறிக்கும்.**

இப்படியாக நாம் எல்லா போதனைகளையும் நம்பிவிடாமல், பெரேயா பட்டணத்தாரைப்போல வேத வசனங்கள் மூலம் சோதித்துப் பார்க்கும்படி நம்மை எச்சரிக்கிறார்.

**அப்போஸ்தலர் 17:11 - "அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்"**

ஆம். ஆதிகாலச் சபையில் பெரேயா பட்டணத்தார் மக்கள் சத்தியத்தைக் கேட்பதில் செலுத்தவேண்டிய கவனத்திற்கும், எச்சரிப்பிற்கும் அவர்கள் எடுத்த பிரயாசம், நமக்கு இன்றைக்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. ஆனால் சபைகளும் அவைகளுடைய வளர்ச்சியும் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கூறும்பொழுது,

**1தீமோத்தேயு 4:1,2 - "ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்"**

ஆம், இந்த வார்த்தைகளை அப்போஸ்தலராகிய பவுல் பரிசுத்தஆவியால் ஏவப்பட்டு முதலாம் நூற்றாண்டில் இருக்கும்போதே, பிற்காலத்தில் நடக்கக்கூடிய காரியங்களை தீர்க்கதரிசனமாக உரைத்தார்(கிட்டத்தட்ட 200-300 வருடங்களுக்கு முன்பு).

இந்தக் காரியங்கள் மூன்றாம், நான்காம் நூற்றாண்டில் சில கிறிஸ்தவர்கள் விசுவாசத்தைவிட்டு விலகி வஞ்சிக்கிற ஆவிகளையும்(நயவஞ்சகமான போதனைகள்) பிசாசுகளின் உபதேசங்களுக்கும்(மூட நம்பிக்கைகள்),பொய்யருடைய மாயத்தினாலே விவாகம் பண்ணாதிருக்கவும்,மாம்சம் புசிப்பது தவறு என்ற போதனைகளையும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதின்மூலம் நிறைவேறியது.

**இதன்பொருள் என்ன?**

இங்குசொல்லப்பட்ட அனைத்துக் காரியங்களும் சில கிறிஸ்தவ சபைகளில் நிறைவேறியது. இன்னும் அநேக வேதம் அங்கீகரிக்காத போதனைகள் போதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டும் இருப்பதை வரக்கூடிய பாடங்களில் நாம் ஆத்துமா, நரகம், இரட்சிப்பு, பாவமன்னிப்பு போன்ற காரியங்களைக் குறித்துப் பார்ப்போம். பின்பு , மற்றொரு தீர்க்கதரிசனத்தை நாம் வாசிக்கையில்,

**2தீமோத்தேயு 4:2-4 - " சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தை பிரசங்கம்பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு புத்தி சொல்லு. ஏனென்றால் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்திற்கு செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்"**

இது, சத்தியத்தை விட்டு கட்டுக்கதைகளுக்குள்(கள்ளபோதனைகள் - அசத்தியம்) வீழ்ந்துபோவதைப்பற்றி சொல்லப்பட்ட மற்றொரு தீர்க்கதரிசனமாகும். ஆனால் இரண்டாம் வசனத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் சகோதரருக்கு அறிவுறுத்தும்போது, **"சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும்"** .. தேவனுடைய ஊழியக்காரருக்கு சூழ்நிலைகள் ஏற்புடையதாக இருந்தாலும், ஏற்புடையதாக இல்லாமற்போனாலும் வசனங்களை போதிப்பதில் ஜாக்கிரதையாகவும், எச்சரிப்பாகவும் இருக்கவேண்டும் என்று கூறுகிறார். ஆனால் கேட்கக்கூடியவர்களின் சூழ்நிலையை மதித்து, அவர்களுக்கு சாதகமாக நடந்துகொள்ளவேண்டும். **"நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும்"** எனும்பொழுது, இந்த சத்தியத்தை மிகுந்த வாஞ்சையோடும், அன்போடும், சாந்தத்தோடும் போதிக்கவேண்டும். இதைக்குறித்து எபேசியருக்கு எழுதின நிருபத்திலும் வாசிக்கலாம்.

**எபேசியர் 4:15 -" அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச்செய்தார்"**

இப்படியாக ஆதிகால சபையில் வஞ்சகங்களும், மகா பரிசுத்தமான விசுவாசத்தை(வேதத்தின் அறிவு) விட்டு விழுந்துபோதலையும் அதைப்பற்றின தீர்க்கதரிசனங்களையும் நாம் காண்கிறோம்.

இப்பொழுது, நாம் ஆதிகால சபை ஐந்து முக்கியமான பட்டணங்களில் ஸ்தாபிக்கப்பட்டதை நினைவுகூறவேண்டும். அதாவது

1. **இஸ்ரயேலில் உள்ள எருசலேம்**
2. **கிரேக்கத்தில் உள்ள அந்தியோக்கியா- அப் 11:26**
3. **வட எகிப்தில் உள்ள அலெக்ஸாண்டிரியா**
4. **துருக்கியில் உள்ள கான்ஸ்டான்டினோபிள்**
5. **இத்தாலியில் உள்ள ரோமாபுரி ஆகியவையாகும்.**

இந்த சபைகள் நிறுவப்பட்டு அவைகளில் கண்காணிகளை மேலான அதிகாரம் உள்ளவர்களாக நியமித்தார்கள். இதைக்குறித்து நாம் கீழுள்ள வசனத்தில் வாசிக்கலாம்.

**1தீமோத்தேயு 3:1,2 - கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான். இது உண்மையான வார்த்தை. ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதக சமர்த்தனுமாய் இருக்கவேண்டும்".**

ஆம் வேதத்தின் அடிப்படையில் கண்காணிகள் சபைகளில் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தார்கள். அனைத்து பட்டணங்களுக்கும் கண்காணிகள் நியமிக்கப்பட்டார்கள். ஆகவே சபைகளைக் குறித்த பொதுவான காரியங்களைப்பற்றி பேசுவதற்கு அனைத்து கண்காணிகளும் ஒன்றுகூடுவது வழக்கமாயிருந்தது.

அப்போஸ்தலனாகிய பவுலும், அப்போஸ்தலனாகிய யோவானும் இப்படிப்பட்ட

கண்காணிகளாக இருந்தவர்களே. ஆனாலும் இவர்களுக்கு எந்தவிதமான தனிப்பட்ட பட்டப்பெயர்கள் இருந்ததில்லை(ஆதாரமாக **வெளி 1:9, பிலிப்1:1** வாசித்து அறியலாம்). சுவிசேஷயுகத்தில் நடக்கும் சபையின் வளர்ச்சியை நாம் இரண்டு உவமைகளில் காணலாம்;

**முதலாம் உவமை :**

**மத்தேயு 13:31,32 - "வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார். பரலோகராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான். அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும்போது சகல பூண்டுகளிலும் பெரிதாகி , ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும் என்றார்"**



இந்த உவமையின் விளக்கம்என்ன? அல்லது இது எதை அடையாளப்படுத்துகிறது? இது, சபையானது முதலாம் நூற்றாண்டில் சிறியதாக ஸ்தாபிக்கப்படுவதையும், பின்வந்த நூற்றாண்டுகளில் பெற்ற வளர்ச்சியையும் குறிக்கிறது. இப்பொழுது நாம் உவமையின் விளக்கத்தைப் பார்ப்போம்.

**கடுகு விதை**-கடுகு விதை எவ்வளவு சிறியதோ அதைப்போல ஆதிசபையானது 12 அப்போஸ்தலர்களையும், சில சீஷர்களையும் கொண்டு மிக சிறிய அளவில் ஸ்தாபிக்கப்பட்டதைக் குறிக்கும்.

**அதை ஒரு மனுஷன் எடுத்து** - இந்த இராஜ்யத்தின் வேலைகள் சுவிசேஷயுகத்தில் முதன் முதலில் கிறிஸ்துவின் மூலம் துவங்கி, பின்பு அவருடைய வழிநடத்துதலின்படி **அப்போஸ்தலர்கள்** நடத்தினதை குறிக்கும்**(அப் 1:8).**

**"தன்நிலத்தில் விதைத்தான்"** - நிலம் என்பது உலகத்தைக் குறிக்கும்(மத்தேயு 13:38). ஆகவே இந்த முழு உலகத்திலும் சுவிசேஷ வேலைகள் நடந்துவந்ததைக் காட்டுகிறது

**"அது வளர்ந்தபோது"** - இது சபை வளர்ச்சி அடைந்து , பின்பு வந்த 300-1000 வருடங்களைக் குறிக்கும். சாதாரணமாக கடுகு செடியானது 2-3 அடிகள் உயரமாக வளரும். ஆனால் உவமையில் ஒரு பெரிய மரமாக வளர்ந்தது இயற்கைக்கு மாறான அசாதாரண வளர்ச்சியைக் குறிக்கும்.

இப்படியாக கிறிஸ்தவ மண்டலம் அசாதாரண வளர்ச்சிபெற்று பெரிய அமைப்பாக மாறி அநேகரை உறுப்பினர்களாக சேர்த்துக்கொண்டது அடையாளப்படுத்துகிறது.

**"ஆகாயத்துப்பறவைகள்"**- இது ஆகாயத்துப் பிரபுவாகிய அந்தகார லோகாதிபதியின்

ஊழியக்காரர்களை (**எபேசி 2:2**;) அல்லது உலக ஆதாயங்களையும், அந்தஸ்துகளையும் சபை மத்தியில் தேடக்கூடிய உலக சிந்தையுள்ளமக்களையும் குறிக்கிறது.

**அவன் மிகுந்த சத்தமிட்டு : மகா பாபிலோன் விழுந்தது விழுந்தது. அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்தஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று-வெளி 18:2**

**"கிளைகளில் வந்தடைந்தது"** : இவர்கள் சபை அமைப்பில் முக்கியமான அதிகாரங்களையும், முக்கியத்துவங்களையும் பெற்ற விதத்தைக் குறிக்கிறது.

இன்றைக்கு கிறிஸ்தவ மண்டலத்தில் (பெயர்க்கிறிஸ்தவர்கள்) இருக்கக்கூடிய பல்வேறு கிறிஸ்தவ கிளைகளைப்பற்றிய (**1500 அமைப்புகள்**) இந்த தீர்க்கதரிசனம் தெளிவாக நமக்கு சித்தரிக்கிறது. இயேசு இதைக்குறித்து மற்றொரு உவமையிலும் சொல்லியிருக்கிறார்.

**இரண்டாம் உவமை :**

**மத்தேயு 13:33 - வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார். பரலோக ராஜ்யம் புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு ஸ்திரீ எடுத்து , முழுவதும் புளிக்கும்வரைக்கும், மூன்றுபடி மாவிலே அடக்கிவைத்தாள் என்றார்"**



இந்த உவமையை முழுமையாகப் புரிந்துகொள்ளுவதற்கு மூன்று முக்கியமான காரியங்களை நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

**1. புளித்தமாவு 2. ஸ்திரீ 3. மூன்று படி மாவு**

இவை அனைத்தும் அடையாளமாக சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது நாம் இந்த வார்த்தைகளுக்கான விளக்கங்களைப் பார்ப்போம்.

## 1. புளித்தமாவு

**மத்தேயு 16:11 - "பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்தமாவுக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று நாம் சொன்னது அப்பத்தைக் குறித்துச் சொல்லவில்லை என்று நீங்கள் உணராதிருக்கிறது எப்படி என்றார்"**

இங்கு பரிசேயர், சதுசேயருடைய புளித்தமாவு எதை அடையாளப்படுத்துகிறது? நாம் அப்போஸ்தலர் 23:8வசனத்தை வாசித்து அறிந்துகொள்ளலாம்.

**"... சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லையென்றும், தேவதூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள்"**

ஆகவே வேதத்தில் புளித்தமாவு என்பது கள்ள உபதேசங்களைக் குறிக்கிறது.

## 2. "ஒரு ஸ்திரீ அதை எடுத்து"

- **இந்த ஸ்திரீ யார்?** வேதாகமத்தில் ஸ்திரீ என்பவள் சபைக்கு அடையாளமாக இருக்கிறாள்,

மேலும் சபையானது இயேசுவுக்கு நியமிக்கப்பட்ட கற்புள்ள கன்னிகை என்று வாசிக்கிறோம்.

**2கொரிந்தியர் 11:2 - "நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவ வைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்".**

ஆனால் இங்கு சொல்லப்படுகிற ஸ்திரி ஒரு நல்ல ஸ்திரீ அல்ல. அந்த ஸ்திரீ யாரைக் குறிக்கிறாள்? இந்த ஸ்திரீ வெளிப்படுத்தின விசேஷத்தில் 17:3ம் வசனத்தில் சொல்லப்பட்ட கள்ள சபையைக் குறிக்கிறாள். அவள் **"பூமியின் ராஜாக்களோடு"** அதாவது அரசாங்கத்தோடும் வல்லமைகளோடும் இணைந்து செயல்படக்கூடியவளாக இருக்கிறாள்.

### 3. மூன்று படி மாவு

மூன்று படி மாவு என்பது கிறிஸ்தவ ஜீவியத்தின் மூன்று ஆதாரத் தூண்களைக் குறிக்கும். அவை **விசுவாசம், நம்பிக்கை, அன்பு** . இவைகளைக்குறித்து கீழுள்ள வசனத்தில் வாசிப்போம்.

**1கொரிந்தியர் 13:13 - "இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது"**

இந்த மூன்றுபடி மாவும் படிப்படியாக தவறான உபதேசங்களால் புளித்து வீணாகப்போனது. இந்தக் காரியம் எப்படி நடந்தது என்று இப்பொழுது பார்ப்போம்.

**"விசுவாசம்"** - மனுஷரால் ஏற்படுத்தப்பட்ட விசுவாச அறிக்கைகள், மகா பரிசுத்தமான விசுவாசத்தின் இடத்தை கைப்பற்றியது(ஒருங்கிணைக்கப்பட்ட விசுவாசம்.. உதாரணம் - அப்போஸ்தல விசுவாச அறிக்கை)
வேத வாசிப்பு தவிர்க்கப்பட்டு உலகப்பிரகாரமான நம்பிக்கைகளும், உபதேசங்களும் சபையின் உண்மையான விசுவாசத்திலும் நம்பிக்கையிலும் நுழைய ஆரம்பித்தது. வேதாகமத்தில் உள்ள சத்தியம் படிப்படியாக மறைந்துபோனது.

**"நம்பிக்கை"** - நமக்குக் கொடுக்கப்பட்ட மிகப்பெரிய நம்பிக்கை "அவரோடுகூட பாடுகளை சகித்தோம் என்றால் அவரோடுகூட ஆளுகையும் செய்வோம்"
கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில்(**2தீமோத்தேயு 2:12)** நடக்கக்கூடிய இந்தக் காரியங்கள் மாற்றப்பட்டு, இந்த ஆளுகை உலக வாழ்க்கையில் கிடைக்கக்கூடியது என்று நம்பப்பட்டது. இந்தக் காரியங்கள் ஆதிகால சபையிலிருந்தே தொடங்கிவிட்டது என்று கீழுள்ள வசனத்தை வாசித்து அறிந்துகொள்ளலாம்.

**1கொரிந்தியர் 4:8,10 - "இப்பொழுது திருப்தியடைந்திருக்கிறீர்களே. இப்பொழுது ஐசுவரியவான்களாயிருக்கிறீர்களே, எங்களை அல்லாமல் ஆளுகிறவர்களானால் நலமாயிருக்கும். அப்பொழுது உங்களுடனேகூட நாங்களும் ஆளுவோமே. நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர், நீங்கள் கிறிஸ்துவில் புத்திசாலிகள். நாங்கள் பலவீனர், நீங்கள் பலவான்கள். நீங்கள் கனவான்கள், நாங்கள் கனவீனர்"**

ஆம். இப்படியாக ஆதிகால சபையிலேயே அதிகாரம் செலுத்தவும், ஆளுகை செய்யவும் விரும்பினார்கள். உலக வாழ்க்கையில் கனத்தையும் மகிமையையும் தேட ஆரம்பித்தார்கள். இது நிமித்தமாக இரத்தம் சிந்தவும் உபத்திரவப்படுத்தவும் துணிந்தனர். ஆம். தற்காலப் பாடுகள் வருங்கால ஆளுகைக்கான நிச்சயம் என்ற நம்பிக்கை முற்றிலுமாக மறுக்கப்பட்டது.

**"அன்பு"** - கடைசியாக, பிதாவின் அன்பும், குமாரனின் அன்பும் தணிந்துபோய், இந்த உலகத்தின் சுபாவமாகிய சுயநலம் சபையை முழுமையாக ஆட்கொண்டது.

ஆம். சபையிலிருந்த சத்தியமும், உண்மையான கிறிஸ்தவ கோட்பாடுகளும் தேவனுடைய வார்த்தைகளை விட்டு, மறைந்துபோனதைப்பற்றி இந்த உவமை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

இப்படியாக, இன்றைய நிலைமையானது கீழுள்ள வசனத்தின்படி நிறைவேறிக்கொண்டுள்ளது.

**ஏசாயா 29:13 - "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது.அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது"**

ஆம் இன்றைய கிறிஸ்தவர்களுடைய நிலைமையை இந்த தீர்க்கதரிசனம் எடுத்துக்காட்டுகிறது. அதே சமயம், கிறிஸ்துவைப் பின்பற்றினவர்கள், கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுவதற்கு முன்பு வேறுவகையில் அழைக்கப்பட்டதை **அப்போஸ்தலர் 24:5**ல் வாசிக்கலாம்

**"என்னவென்றால், இந்த மனுஷன் கொள்ளைநோயாகவும், பூச்சக்கரத்திலுள்ள சகல யூதர்களுக்குள்ளும் கலகம் எழுப்புகிறவனாகவும், நசரேயருடைய மதபேதத்துக்கு முதலாளியாகவும் இருக்கிறானென்று கண்டறிந்தோம்"**

ஆம். இயேசுவை பின்பற்றினர்களை நசரேயர்கள் என்று அழைத்தார்கள். அதுபோல இன்றும் உண்மை விசுவாசத்தையும் , சத்தியத்தையும் பின்பற்றுகிறவர்கள் "கலக வகுப்பார்" என்று குறிப்பிடப்படுகிறார்கள். ஆனால் இவையனைத்தையும் தாண்டிய தேவ வாக்குத்தத்தம் நமக்கு உள்ளதை நீதிமொழிகள் 4:18இல் பார்க்கிறோம்.

**"நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்"**

ஆம். நிச்சயமாகவே கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற நீதிமான்களுக்கு தேவன் பிரகாசிக்கிற ஒளியாகிய "சத்தியத்தை" வாக்களித்திருக்கிறார். சகல குழப்பங்கள், தவறுகள் மத்தியிலும் விசுவாசத்தோடு சத்தியத்தின் பாதையில் நடப்போருக்கு தேவன் அவருடைய அன்பையும் வழிநடத்துதலையும் நிச்சயமாக அருளுவேன் என்று உறுதி அளித்திருக்கிறார்.



**தேவ கிருபை தொடர்ந்து நம்மை சத்தியத்தை அறிகிற அறிவில் வழிநடத்துவதாக, ஆமென் !!**

*For Further Details : Email us : baskar_harvest@yahoo.co.in, Phone : 97886 19229, 93641 50005*